**STC.NO.508 /2020 PW-1**

நாள் : 04.10.2023

பெயர்: சிவக்குமார்

த/பெ : சேஷகிரி

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

1. உங்கள் நிறுவனமான HIQ நிறுவனம் பங்குதாரரர் நிறுவனமா அல்லது புரப்பரேட்டர் சார்ந்ததா என்றால் கூட்டுவியாபாரிகள் தான். அந்த கூட்டுவியாபார நிறுவனத்தை எப்போது தொடங்கினீரக்ள் என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை ஆவணத்தை பார்ததது தான் சொல்லமுடியும். நீங்கள் உங்களுடைய நிறுவனத்தை பதிவு செய்துள்ளீர்களா என்றால் ஆமாம் சென்னையில் பதிவு செய்திருக்கிறேன். எங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால ் Registrar of Firms ல் பதிவு செய்யப்பட்டுள்து அது எந்த பதிவு மாவட்டத்தில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது என்னுடைய ஆடிட்டருக்கு தெரியும் .அந்த பங்குதாரர் நிறுவன்தில ் எத்தனை பேர ் பங்குதாரர்களாக இருந்தார்கள ் என்றால ் 3 பேர் இருந்தார்கள். தற்போது அந்த 3 பேர் தொடர்கிறார்களா என்றால் இல்லை. அந்த 3 பெயர்களின் பாங்குதார்கள் யார்என்றால் நான் என்னுடைய மகன்கள் விவேக், மற்றும் விஸ்வேஷ்வரன். அந்த பங்குதாரர் நிறுவனம் பதிவு செய்ததற்காக ஆவணம் உங்களிடத்தில் உள்ளதா என்றால் ஆடிட்டரிடம் தான் உள்ளது. எதிரி ராஜாராம் தனிப்பட்ட முறையில் காசோலை கொடுத்தாரா அல்லது நிறுவனத்தின் சார்பாக காசோலை கொடுத்தாரா என்றால் நிறுவனத்தின் சார்பாக தான் கொடுத்தார். அந்த நிறுவனத்தின் பெயர் என்ன என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை.

2. உங்களுக்கு எதிரியை எவ்வளவு ஆண்டுகள் தெ்ரதியும் என்ற்ால் 15 ஆண்டுகளாக தெரியும். உங்களுக்கு Import Export licence உள்ளதா என்றால் ஆமாம். அந்த அனுமதியின் பேரில் நீங்களே உங்களுடைய பொருட்களை ஏற்றுமதி

மற்றும் இறக்குமதி செய்துகொள்ளலாம் என்றால் ஆமாம். எதிரிக்கும் Import Export licence உள்ளதா என்றால் ஆமாம். நீங்கள் எதற்காக எதிரிக்கு பணம் கொடுத்தீர்கள் என்றால் அவர் எனக்கு தோல் சப்ளை செய்வதாக சொன்னார் அதற்காக நான் முன்பணம் கொடுத்தேன். அந்த தோல் எந்த வகையை சேர்ந்தது என்றாதல் Wet Blue split வகையை சேர்ந்தது. எதிரி எவ்வளவு தோல் உங்களுக்கு கொடுபப்தாக ஒப்புக்கொண்டார்ஏ ன்ற்ால் ஒரு கண்டெய்னர் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். ஒரு கண்டெய்னர் Wet Blue split தோல் எவ்வளவு ஆகும் என்றால் 60 – 70 லட்சம் ஆகும். எதிரிக்கு எப்போது தோல் வாங்குவதற்கு ஆடர் கொடுத்தீர்கள் என்றால் 17/07/2017 அன்று கொடுத்தேன். purchase order கொடுத்தீர்களா என்றால் நாங்கள் அந்த முறையை கையாளவில்லை. அந்த சமயத்தில‍் நீங்கள‍் எதிரிக்கு எவ்வளவு பணம் கொடுத்தீர்கள் என்ற்ால் ரூ.25 லட்சம் கொடுத்தேன். ரூ.25 லட்சம் எவ்வாறு கொடுக்கப்பட்டது என்றால‍் ரொக்கமாக கொடுக்கப்பட்டது. நீங்கள் வருமானவரி செலுத்தி வருகிறீர்களா என்றால் ஆமாம். நீங்கள் எவ்வளவு நாட்களாக வருமானவரி செலுத்தி வருகிறீர்கள‍் என்றால‍் நான‍் தொழில‍் ஆரம்பித்த காலத்தில் இருந்து வருமானவரி செலுத்திவருகிறேன்.

3. HIQ Leather நிறுவனத்தில் வரவு செலவு கணக்குகளை நீங்கள முறையாக பராமரித்து வருகிறீர்களா என்றால் ஆமாம். அதிலிருந்து வரக்கூடிய வருமானத்திற்கு கணக்காயர் மூலமாக வருமானவரித்துறைக்கு வரி செலுத்தி வருகிறீர்களா என்றால் ஆமாம். ஆவணத்தில் ரூ.25லட்சரூபாய் கொடுத்ததற்கு குறிப்பு வைத்துள்ளீர்களா என்றால் என் ஆடிட்டரிடம் இருக்கும். கணக்கு புத்தகங்களை எல்லாம் கேட்டு எதிரி தரப்பு வழக்கறிஞர் உங்களுக்கு அறிவிப்பு அனுப்பி இருந்தார் என்றால் ஆமாம் அதற்கு நாங்களும் பதில் அனுப்பி இருக்கிறோம். 2017–2018 வருட கணக்கு புத்தகத்தை பார்த்தால் எதிரிக்கு நீங்க்ள் கொடுத்ததாக சொல்லும் ரூ.25 லட்ச ரூபாய் பணம் குறிப்பிடப்பட்டிருக்கும் என்று சொன்னால் ரொக்கமாக கொடுக்கும் தொகையை

cash புக்கில் குறிப்பிடுவதில்லை. உங்கள் நிறுவன ஆடிட்டரிடம் ரூ.25 லட்ச ரூபாய் பணம் கொடுத்த விவரத்தை சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லி உள்ளேன். அந்த ஆவணத்தை நீங்கள் வழக்கில் தாக்கல்செய்ய தயாரா என்றால் ஆமாம். ரூ.25 ஆயிரம் ரூபாய்க்கு மேலான தொகையை ஒரு நபருக்கு கொடுப்பது என்றால் அது காசோலை மூலமாகவோ அல்லது டிடி மூலமாக தான் கொடுக்கமுடியும் என்ற விவரம் தெரியுமா என்றால் ஆமாம். அவ்வாறு நீங்கள் 25 லட்ச ரூபாய் நீங்கள் கொடுத்ததாக சொல்லும் பணம் சட்டத்திற்கு புறம்பானது என்றுசொன்னால் அது சரிதான்.

4. நீங்கள் கேட்ட ஒரு கண்டெய்னர் தோலை எவ்வளவு நாளில் உங்களுக்க எதிரி தருவதாக சொன்னார் என்றால் 6 மாத காலத்திற்குள் கொடுப்பதாக சொன்னார். 6 மாதம் கழித்தும் உங்களுக்கு எதிரி தோலை சப்ளை செய்தாரா என்றால் இல்லை. அவ்வாறு எதிரி தோலை சப்ளை செய்யாத போதும் நீங்கள் அவருக்கு பணம் கொடுத்ததாக சொல்கிறீர்கள் என்றால் நான் கொடுத்தால் தான் தோல் கொடுப்பேன் என்றார். எதிரி 25 லட்ச ரூபாய்க்கு தோல் சப்ளை செய்யாதபோது மீண்டும் எவ்வாறு அவருக்கு பணம் கொடுத்தீர்கள் என்றால் அந்த பணத்தை கொடுத்தால் தான் தோல்கள் கிடைக்கும் என்று சொன்னார் அதனால் தான் கொடுத்தேன். எதிரிக்கும் உங்களுக்கும் மேற்சொன்ன பரிவர்த்தனை குறித்து எழுத்துப்பூர்வமான ஒப்பந்தம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. உங்களுடைய புகாரிலேயோ வழக்கறிஞர் அறிவிப்பிலேயோ தோல் சப்ளை செய்வதற்காக தான் எதிரிக்கு நீங்கள் 25 லட்ச ரூபாய் கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் இல்லை நான் குறிப்பிட்டிருக்கிறேன். உங்களுயைட பிரமாண வாக்குமூலத்தில நீங்கள் உங்களிடம் இருக்கக்கூடிய தோலை வெளிநாட்டில் விற்றுக்கொடுப்பதற்காகவும் வெளிநாட்டில் இருக்கக்கூடிய விலை உயர்ந்த ரசாயனப்பொருட்களை உங்களுக்கு பெற்றுதருவதாகவும் அதற்காக தான் நீங்கள் எதிரியிடம் 25லட்ச ரூபாய் பணம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளது பற்றி கேட்டால் ஆமாம் அவ்வாறு கேட்டு தான் அவர்

பணம் பெற்றார்.

5. எதிரிக்கு மறுபடியும் ரூ.30லட்ச ரூபாய் பணம் கொடுத்ததாக சொல்லும் நீங்கள் அந்த பணத்தை எவ்வாறு கொடுத்தீர்கள் ஏ்னாறல் காசோலை மூலமாக ஆர்.டி.ஜி.எஸ் செய்து கொடுத்தேன். ஆர்.டி.ஜி.எஸ் மூலமாக தான் பணம் எதிரிக்கு கொடுத்ததாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது பற்றி கேட்டால் அவ்வாறு தான் கொடுக்கப்பட்டுள்ளது. எதிரிக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லும் மேற்சொன்ன 30 லட்ச ரூபாயை உங்களுடைய வரவு செலவு புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் ஆமாம். அந்த தொகையை வருமானவரி பதிவுகளுக்கு உட்படுத்தி உள்ளீர்களா என்றால் ஆமாம். மேற்படி ரூ.30லட்சத்தை கணக்கில் காட்டும்போது அதற்கு முந்தைய நிதியாண்டில் கொடுத்ததாக சொல்லும் ரூ.25லட்ச ரூபாயும் வரவு வைத்திருக்கப்படும் என்று சொன்னால் அதை ஆடிட்டரிடம் தான் கேட்கவேண்டும். வழக்கு காலேையை எதிரி எப்போது உங்களுக்க கொடுத்தார்எ ன்றால் செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி ஆனால் வருடம் ஞாபகமில்லை. அந்த காசோலைக்கான தொகை எவ்வளவு என்றால் ரூ-.72,20,000/= ஆகும். அந்த தொகையை எவ்வாறு வரையறுக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது எதிரி தான் அந்த தொகையை கணக்கு செய்து கொடுத்தார். ஆனால் உங்கள் வாதப்படி 25 லட்சம் மற்றும் 30 லட்சம் தொகை தான் எதிரி உங்களிடம் பெற்றிருந்தார்எ னவே மொத்தமாக ரூ.55லட்சம் தான் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் எதிரி தான் அந்த தொகையை கணக்கிட்டு கொடுத்தார்.

6.உங்கள் வரவு செலவு கணக்கில் எதிரி ரூபாய் 72,20,000/= கொடுக்கவேண்டும் என்று எந்த குறிப்பும் இல்லை என்றால் ஆமாம். எதிரி காசோலையை தவிர பாண்டு எதுவும் எழுதி கொடுத்தாரா என்றால் கொடுத்திருக்கலாம் அந்த பாண்டு எப்போது கொடுத்திருக்கலாம் என்றால் அது எனக்கு சரியாக ஞாபகமில்லை. அந்த பாண்டின் தொகை எவ்வளவாக இருக்கும்

என்றால் ரூ.72,20,000/= இருக்கும். இதே வழக்கில் ராமச்சந்திரன் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பி உள்ளீர்கள் என்றால் ஆமாம். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு ஏற்கனவே பு.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பில் எதிரி உங்களுக்கு கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் ஆமாம்.

7.அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் எந்த தேதியில் எதிரி உங்களுக்கு காசோலை கொடுத்தார் எந்த தேதியில் கடனுறுதி ஆவணம் எழுதிக் கொடுத்தார்என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். அந்த கடனுறுதி சீட்டை வழக்கில் ஆவணமாக தாக்கல்செய்யவில்லை என்று சொன்னால் எனக்கு சரியாக தெரியவில்லை. அந்த கடனுறுதி சீட்டை தாக்கல் செய்தால் தான் எதிரி உங்களுக்கு எவ்வளவு பாக்கி வைத்திருக்கிறார் என்ற முழு விவரமும் தெரியும் என்றால் ஆமாம். இதே பரிவர்த்தனை தொடர்பாக எதிரி மீது சென்னை மத்திய குற்றப்பிரிவில் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் ஆமாம் மத்திய குற்றப்பிரிவு போலீசார் புகாரை எடுத்துக்கொள்ளாமல் நீதிமன்றத்திற்கு சென்று வழக்கு போடச்சொன்னார்கள் அதன் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதன் பிறகு மீண்டும் இதே சம்பவம் தொடர்பாக மத்திய குற்றப்பிரிவு போலீசாரிடம் புகார் கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை எதிரியினுடைய மாமியார் என்னிடம் ரூ.25 லட்சம் பணம் வாங்கியிருந்தார் அந்த பரிவர்த்தனை தொடர்பாகவே புகார் கொடுக்கப்பட்டது. எதிரியின் மாமியார் உங்களிடம் தனிப்பட்ட முறையில் 25 லட்ச ரூபாய் பணம் பெற்று அதனை அவர் திருப்பி கொடுக்காமல் அவர் ஏமாற்றியதனால் மேற்சொன்ன புகாரை குற்றப்பிரிவில் கொடுத்தீர்களா என்றால் ஆமாம். மேற்படி எதிரியின் மாமியார் வாங்கிய கடனுக்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் ஆமாம்.

8. எதிரியின் மாமியார் எதன் அடிப்படையில் உங்களிடம் கடன் பெற்றார்கள் என்றால் மணிமங்கலத்தில் அவருடைய சொத்து பத்திரத்தை செக்யூரிட்டியாக கொடுத்து அதன் அடிப்படையில் பணம் வாங்கினார்கள். நீங்கள் மத்திய குற்றப்பிரிவு போலீசாரிடம் கொடுத்த புகாருக்கும் இந்த காசோலை அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ள வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் ஆமாம். எதற்காக இந்த வழக்கின் எதிரியை அந்த புகாரில் ஒரு தரப்பினராக சேர்த்துள்ளீர்கள் என்றால் அவரை போலீசார் சேர்த்துள்ளார்கள். இந்த வழக்கு எதிரிக்கும் சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசில் தாக்கல் செயய்ப்பட்டுள்ள வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் ஆமாம். எதிரியின் மாமியார் ஊரில் இல்லாத காரணத்தினால் எதிரியை போலீசார் வழக்கில் சேர்த்திருக்கலாம் என்றால் இருக்கலாம். நீங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வீடு மூடியிருந்தது என்று சொல்லி திருப்பப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எனவே வழக்கறீஞர் அறிவிப்பு எதிரிக்கு சார்பாகவில்லை என்றுசொன்னால் ஆமாம். காசோலையில் யார் பூர்த்தி செய்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. யாருடைய வங்கி கணக்கில் இருந்து காசோலையை கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரனி உங்களுக்க எந்த தொகையும் கொடுக்க அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி உங்களுக்கு எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு காசோலை லாரா டிரேடர்ஸ் என்ற கூட்டு நிறுவனத்திற்கு சம்பந்தப்பட்டது என்றால இருக்கலாம ஆனால காசோலையில உள்ள கையெழுத்து எதிரியினுடையது.

9.அந்த காசோலையில் லாரா டிரேடர்சின் சீல் கூட இல்லாமல் உள்ளது என்றால் ஆமாம். லாரா டிரேடர்சின் இந்த வழக்கில் எந்த தரப்பினரும் இல்லை அதன் விவரங்களையும் நீங்கள் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பங்குதாரர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நீங்கள் கொடுத்ததகா சொல்லப்படும் பணம்

சட்டவிரோதமானது என்று சொன்னால் அது தவறு. எதிரி எழுதிக்கொடுத்ததாக சொல்லும் கடனுறுதி சீட்டை வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை எனவே வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றுசொன்னால் சரியல்ல

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- xxxxxxxx
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.